ORAAYAM FOUNDATION ஓராயம் அமையம்

Community Development Programme, சமூக மேம்பாட்டுத்திட்டங்கள்
A registered Non-Profit Organisation in Canada. CPN # 1222373-2

105, Dun Skipper Drive,
Ottawa, ON K1X 0G1, Canada

info@oraayam.org

www.oraayam.org

02 சனவரி 2021

## புலத்துச் செயற்பாடுகளுக்கான நிதி உதவி கோரல்

அன்புடையீர்,

மட்டக்களப்பு மேற்குக் கல்விவலயம், போர்க்காலச் சூழலின் பின் கல்வி நிலையில் மிகவும் பின்தங்கியுள்ளது. இக்கல்வி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையும் அதிகம். இவ்வலயம், மிகவும் பின் தங்கிய இடமாதலால், வெளி மாகாணத்தில் இருந்து இங்கு வரும் ஆசிரியர்களும், நீண்ட காலம் நிலைத்து நிற்பதில்லை. இதன் பின்னணியில் ஓராயம் அமையம், மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலய அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க மாணவர்களுக்கான நான்கு வகையான உதவித் திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது.

அவையாவன :

1. வறுமைக் கோட்டிற்குக்கீழ்,குடும்ப வருமானம் கொண்ட, 46, ஆறாம் வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு, மாதம் ரூபா 750 வழங்குதல்.
2. முன்பள்ளி மேலதிக உதவி தொண்டர் ஆசிரியர்களாக 10 பேரை நியமித்து, அவர்களுக்கான உதவிப் பணமாக மாதம் ரூபா 2,500 வழங்குதல்.
3. ஐந்து உயர்வகுப்பு (A/L) வறிய குடும்ப மாணவர்களுக்கான Tablet/laptop உதவி.
4. வறுமையான குடும்பநிலைமைகளில் 26 பாடசாலைகளில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்ற 719 மாணவர்களுக்கு Pen Drive வழங்குதல்.

இச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு **மொத்தம் 9,500** கனடியன் டொலர் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.
இத்தேவையினைப் பூர்த்தி செய்ய, தாராள உள்ளம் படைத்த **37 பேர்** இணைந்து ஒவ்வொருவரும் **250 கனடியன் டொலரை** தனியாகவோ அல்லது கூட்டாகவோ பங்களிக்க முடியும். எனவே மிகவும் வறுமையால் கஷ்டப்படும் மாணவர்களின் கல்வித் தரத்தை ஊக்குவிக்கும் இத் திட்டத்திற்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இத்திட்டத்திற்குரிய மேலதிக தகவலும் அண்ணளவான செலவு விபரங்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தினை கல்வி அதிகாரிகளின் உதவியுடன் காலத்துக்குக்காலம் உங்களுக்கு அறியத்தருவோம்.

இப்படிக்கு
தர்மகுலராசா. செ
செயலாளர் / ஓராயம்

Group of Experienced Persons joined to provide Community Development Programmes on Education, Agriculture & Environment, Water Resources, Healthy Living, Sustainability & Waste Management and Youth Empowerment& Employment

President: **N.Thanabalasingam**
Secretary: **S.Tharmakularajah**
Treasurer: **T.Buvanendran**
Vice Presidents: **K.Premachandra**, **K.Vishnudhasan**
Asst.Secretary: **N.Kumaravel**
Asst.Treasurers: **K.Bhavananda**, **P.Thayanithy**
Public Relations Officers: **N.Kalaparan**, **S.Sivakumaran**